[11th August 1960

Sri V. SUBBIAH: நமது ராஜ்யத்திலே ஜமீன்தாரி ஒழிப்பிற்குப் பிறகு பல கிராமங்கள் குறிப்பிட்ட தாலுகாவிலிருந்து 40 மைல் தூரத்தில் இருக்கின்றன. அவற்றைச் சமீபத்தில் உள்ள தாலுகாவுடன் இணைக்க என்ன திட்டம் இருக்கிறது?

The Hon. Sri M. A. MANICKAVELU: இந்தக் கேள்வி வட ஆற்காடு மாவட்டத்தைப் பொருத்தது. கனம் அங்கத்தினர் பொதுவாகக் கேட்பதால் தனியாகக் கேட்டால் பதில் அளிக்க முடியும்.

Ship-building yard at Tuticorin

*92. *Q.*—Sri V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கொழும்பு திட்டப்படி, பிரிட்டனிலிருந்து வந்த நிபுணர் கோஷ்டி தூத்துக்குடி கப்பல் கட்டத் தகுதியான இடம் என்று சிபாரிசு செய்தார்களா?

(ஆ) அப்படியானால், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

The Hon. Sri R. VENKATARAMAN: (அ) No, Sir.

(ஆ) Does not arise.

Figures of leaders on the postage stamps

*93. *Q.*—Sri P. G. MANICKAM: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தபால் தலைகளிலே எந்தெந்தப் பெரியோர்களின் உருவங்களை வெளியிடப்பட வேண்டுமென்று சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள்?

(ஆ) எந்தெந்த பெரியோர்களுடைய உருவப் படங்களை வெளியிட சர்க்கார் சம்மதித்திருக்கிறார்கள்?

(இ) 1960-61-ம் வருஷத்திலே மத்திய சர்க்காரால் புதிதாக வெளியிடப்போகும் தபால் தலைகளிலே சென்னை சர்க்காரால் தெரிவிக்கபட்டிருக்கும் பெரியோர்களுடைய உருவங்கள் அச்சிடப் படுமா?

The Hon. Sri V. RAMAIAH: (*a*) No recommendation has been made in this regard by this Government to the Central Government.

(*b*) & (*c*) Do not arise.

Sri P. G. MANICKAM: சென்ற வருஷம் நமது சென்னை அரசாங்கம் முயற்சி எடுத்ததன் காரணமாகத் திருவள்ளுவர் படமானது தபால் தலைகளில் பொறிக்கப்பட்டது. இந்த ஆண்டிலும் அதே போல் நம்முடைய நாட்டிலுள்ள பெரியோர்களின் படங்

11th August 1960]

களைத் தபால் தலைகளில் பொறிப்பதற்காக, நம்முடைய மாகாண அரசாங்கமானது மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : சென்ற வருடம் திருவள்ளுவர் உருவப்படம் தபால் தலைகளில் வந்ததற்குக் காரணம் முழுக்க முழுக்க மத்திய அரசாங்கந்தான். அதற்காக நாம் ஒன்றும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை.

SRI N. R. THIAGARAJAN : திருவள்ளுவர் படம் வெளி வந்திருந்தாலும் அவருடைய படம் எப்படி இருக்கும், போட்டோ எடுக்கப்பட்டதா என்ற அபிப்பிராயங்கள் எல்லாம் இருக்கும். நமது காலத்தில் வாழ்ந்த கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணியம், வ.உ.சி. போன்றவர்களின் உருவப்படத்தைத் தபால் தலைகளில் வெளியிட நமது அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை எப்போதும் சிபாரிசு செய்யவில்லை. இது மத்திய அரசாங்கத்தினுடைய வரம்புக்குட்பட்டது. கனம் அங்கத்தினர் அவர்கள் மத்திய அரசாங்க மந்திரிக்கு எழுதினால் கண்டிப்பாகப் பரிசீலனை செய்வார்கள்.

Bonus to Plantation Workers

* 94 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether employers and employees of plantations have represented to the Government to refer the bonus issue of 1959 to adjudication; and

(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) A meeting of Planters and Unions was convened on 9th July 1960, in Madras. It was decided at the meeting to set up a Committee consisting of the representatives of Planters and Unions with the Commissioner of Labour as Chairman, to evolve a formula based on price and yield for the payment of bonus for 1959. The matter is being pursued.

SRI N. K. PALANISAMI : When there is dispute between workers and employers every year regarding the disbursement of bonus, may I know whether there is a proposal before Government to formulate some principle on which the bonus could be disbursed to workers every year?

THE HON. SRI R. VENKATARAMAN : That is the matter which is now being pursued.